# நவம்பர் – 19 – திங்கள்
## புனித நேர்செஸ்

**நேர்மையாளரின் நெறியை ஆண்டவர் கருத்தில் கொள்வார் - திபா 1:6**

## முதல் வாசகம் : திருவெளிப்பாடு 1 : 1 – 4, 2 : 1 – 5

சகோதர சகோதரிகளே! இது இயேசுக் கிறிஸ்து அருளிய திருவெளிப்பாடு. விரைவில் நிகழவேண்டியவற்றைத் தம் பணியாளர்களுக்குக் காட்டுமாறு கடவுள் இவ்வெளிப்பாட்டைக் கிறிஸ்துவுக்கு அருளினார். அவர் தம் வானதூதரை அனுப்பித் தம் பணியாளராகிய யோவானுக்கு அவற்றைத் தெரிவித்தார். அவர் கடவுள் அருளிய வாக்குக்கும் இயேசுக் கிறிஸ்து வெளிப்படுத்திய உண்மைக்கும், ஏன், தாம் கண்டவை அனைத்துக்குமே சான்று பகர்ந்தார்.இந்த இறைவாக்குகளைப் படிப்போரும் இவற்றைக் கேட்போரும் இந்நூலில் எழுதியுள்ளவற்றைக் கடைப்பிடிப்போரும் பேறுபெற்றோர். இதோ! காலம் நெருங்கி வந்துவிட்டது. ஆசியாவில் உள்ள ஏழு திருச்சபைகளுக்கும் யோவான் எழுதுவது, இருந்தவரும், இருக்கின்றவரும், வரவிருக்கின்றவருமான கடவுளிடமிருந்தும், அவரது அரியணைமுன் நிற்கும் ஏழு ஆவிகளிடமிருந்தும், இயேசுக் கிறிஸ்துவிடமிருந்தும் உங்களுக்கு அருளும்இ அமைதியும் உரித்தாகுக! எபேசில் உள்ள திருச்சபையின் வானதூதருக்கு இவ்வாறு எழுது. “தமது வலக்கையில் ஏழு விண்மீன்களை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு, ஏழுபொன் விளக்குத்தண்டுகள் நடுவில் நடப்பவர் கூறுவது இதுவே.உன் செயல்களையும் கடின உழைப்பையும் மனவுறுதியையும் நான் அறிவேன். தீயவர்களை உன்னால் சகித்துக் கொள்ள முடியாது என்பதும், திருத்தூதர்களாய் இல்லாதிருந்தும் தங்களை அவ்வாறு திருத்தூதர்கள் என அழைத்துக் கொள்ளுகின்றவர்களை நீ சோதித்துப் பார்த்து, அவர்கள் பொய்யர்கள் என்று கண்டறிந்தாய் என்பதும் எனக்குத் தெரியும்.நீ மனவுறுதி கொண்டுள்ளாய் என் பெயரின்பொருட்டு எத்தனையோ துன்பங்களை நீ தாங்கிக் கொண்டுள்ளாய் ஆயினும் சோர்வு அடையவில்லை என்பதும் எனக்குத் தெரியும்.ஆனால் உன்னிடம் நான் காணும் குறை யாதெனில், முதலில் உன்னிடம் விளங்கிய அன்பு இப்போது இல்லை.ஆகையால் நீ எந்நிலையிலிருந்து தவறி விழுந்து விட்டாய் என்பதை நினைத்துப்பார். மனம்மாறு. முதலில் நீ செய்து வந்த செயல்களை இப்பொழுதும் செய். நீ மனம் மாறத் தவறினால், நான் உன்னிடம் வந்து உனது விளக்குத்தண்டை அது இருக்கும் இடத்திலிருந்து அகற்றிவிடுவேன்.

**பதில்பாடல் :** வாழ்வு தரும் மரத்தின் கனியை வெற்றி பெறுவோருக்கு உண்ணக் கொடுப்பேன்.

## நற்செய்தி : லூக்கா 18 : 35 - 43

அக்காலத்தில் இயேசு எரிக்கோவை நெருங்கி வந்தபோது, பார்வையற்ற ஒருவர் வழியோரமாய் உட்கார்ந்து பிச்சையெடுத்துக் கொண்டிருந்தார்.மக்கள் கூட்டம் கடந்து போய்க்கொண்டிருந்ததைக் கவனித்த அவர், ”இது என்ன?” என்று வினவினார். நாசரேத்து இயேசு போய்க்கொண்டிருக்கிறார் என்று அவருக்குத் தெரிவித்தார்கள்.உடனே அவர், ”இயேசுவே! தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று கூக்குரலிட்டார்.முன்னே சென்று கொண்டிருந்தவர்கள் அமைதியாய் இருக்குமாறு அவரை அதட்டினார்கள். ஆனால் அவர், ”தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று இன்னும் உரக்கக்கத்தினார்.இயேசு நின்று, அவரைத் தம்மிடம் கூட்டிக்கொண்டு வரும்படி ஆணையிட்டார். அவர் நெருங்கி வந்ததும்,”நான் உமக்கு என்ன செய்யவேண்டும் என விரும்புகிறீர்” என்று இயேசு கேட்டார். அதற்கு அவர், ”ஆண்டவரே, நான் மீண்டும் பார்வை பெறவேண்டும்” என்றார்.இயேசு அவரிடம், ”பார்வை பெறும் உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று” என்றார்.அவர் உடனே பார்வை பெற்று, கடவுளைப் போற்றிப் புகழ்ந்து கொண்டே இயேசுவைப் பின்பற்றினார். இதைக்கண்ட மக்கள் யாவரும் கடவுளைப் புகழ்ந்தனர்.

**தியானம்:** நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு எருசலேம் நோக்கிய பயணத்தில் எரிக்கோவை நெருங்கி வந்தபோது, பார்வையற்றவர் ஆண்டவர் இயேசு தான் கடந்து செல்கிறார் என்று அறிந்து “தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்று கத்துகிறார். மக்கள்கூட்டம் அமைதியாக இருக்கவேண்டும் என்று சொல்லியும், அவர் இன்னும் உரக்க “தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என்கிறார். இதைக்கண்டு இயேசு அவருடைய நம்பிக்கைக்கு வெகுமதியாக அவருக்கு பார்வையை அளிக்கின்றார். பார்வையற்ற அந்த மனிதரின் நம்பிக்கை, ஆண்டவர் இயேசு தனக்கு நலமாளிப்பார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்கு நலமளித்தது என்று சொன்னால் அது மிகையாகாது. நமது வாழ்வில் நாம் இறைவனிடம் எத்தகைய நம்பிக்கை வைத்து வாழ்கிறோம் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒருமுறையோ அல்லது இருமுறையோ இறைவனிடம் வேண்டிவிட்டு, அந்த ஜெபம் கேட்கப்படவில்லை எனில், நாம் நமது நம்பிக்கையில் தளர்ந்து போய்விடுகின்றோம். ஆனால் பார்வையற்ற அந்த மனிதர் மக்கள் கூட்டம் தன்னை அதட்டி, பேசாது இருக்கவேண்டும் என்று சொன்ன போதும் அவர் இடைவிடாது இயேசுவை நோக்கிக் கத்துகிறார். இறுதியாக இறைவனின் அருளை நிறைவாய் பெறுகிறார். நாமும் இத்தகைய பண்பினைக் கற்றுக்கொள்வோம். எல்லாம் வல்ல இறைவனில் நாம் நம்பிக்கை வைத்து வாழும்போது பேறுபெற்ற மக்களாகின்றோம். எனவே பார்வையற்ற அந்த மனிதரைப்போன்று எல்லாம் எல்லாம் வல்ல இறைவன் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து வாழ்வோம். வாழ்வில் வரும் சோதனைகளை முறியடித்து, இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்து அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்